# பஞ்ச புராணத் திரட்டு




வெளியீடு
சைவத்தமிழ் பண்பாட்டுப்பேரவை (டென்மார்க்)

தொகுப்பாசிரியர்
வேலணையூர் பொன்னண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருஞான சம்பந்தர் | அப்பர் | சுந்தரர் | மாணிக்க வாசகர்

# பஞ்ச புராணத் திரட்டு

வெளியீடு

**சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்பாசியர் கருத்து

இறைவன் இசைவடிவானவன். ஏழிசையால் இசைப்பயனாய் உள்ளவன் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே என்றார் திருநாவுக்கரசர் பெருமான். பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் பெருமானோ "இறைவன் இசைவிரும்பும் கூத்தனார்"என்றார் இசைஎன்பது இறைவனது நிவேதனம்.

இந்த இசையை புலம்பெயர் சைவமக்கள் பெரிதும் விரும்பிக் காத்துவந்த பரம்பரையில் இருந்து பற்றுக் கொண்டு பாடி வந்தாலும். அந்த பன்னிரு திருமுறைகளில் இருந்து இனங்கண்டு தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் திருப்பகழ், வாழ்த்து என வரிசைப்படுத்தி பண்ணோடு பாட பயிற்சிநெறிகள். புலம்பெயர் வாழ்க்கையில் கிடைப்பது அரிது. அதனால், பாடல் தெரிந்தும் சபையில் பாடும்போது முன்பின் பாடலாக மாற்றிப் பாடும் நிலைக்கு ஆளாகி விடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையை அறிந்து இக்குறையைப் போக்க வேண்டுமென எண்ணியே இந்த பஞ்சபுராணத் திருப்புகழ் தொகுப்பை வெளியீடு செய்ய டென்மார்க் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை ஒரு முயற்சியை எடுத்து உங்கள் கையில் தந்துள்ளது. நீங்கள் இதை ஏற்று முறையாகப் பாடுவதோடு, எதிர்காலத்தில் பாட முயற்சிக்கும் உங்கள் சந்ததிக்கும் முறையாகச் சொல்லிக் கொடுப்பீர்கள் என்ற பூரண நம்பிக்கையோடு இந்நூலை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

உடல் உள்ளம் இவற்றின் தூய்மையே ஆன்மஞானம் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது. அகத்தூய்மையோ வாய்மையால் அமைவது. அது கிட்டுவதற்கும். உடல் நோய்நொடியால் பழுதுபடாமல் பாதுகாக்கப் படுவதற்கும். இஷ்டதெய்வ வழிபாடு முக்கியமாகிறது. வழிபாட்டிற்கு முக்கியமானதாக இருப்பது தோத்திரங்களே ஆகும். அந்த தோத்திரங்களை முறையாக வரிசையாக பண்ணோடு இசைப்பது ஆன்ம ஈடேற்றத்துக்கு முக்கியமானதாகும். இத் தோத்திரங்கள் பல்வேறு மொழிகளில் நிறையவே இருந்தாலும் இறைவழிபாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையிடத்தில், தனியிடத்தில் விளங்கி வருவது இனிமை நிறைந்த தெய்வீகமான எமது தமிழ்த் தோத்திரங்களேயாகும்.

இவற்றை அழகுபட திரட்டி மக்கள் கரமெட்டவைப்பது ஒரு கட்டாய கடமையாகும் என்பதை உணர்ந்தே இப்பணியைத் தொடர்ந்தோம். இறைவனின் எண்ணற்ற திருநாமங்களாகிய சிலவற்றைத் தேடிப் பொறுக்கி எடுத்து, மாலையாக்கி இறைமணம் வீசும் நூலாய்க் கோர்த்து, இறைவன் திருவடி பாதமலர் பூசிப்பதன் மூலம் கற்றோரும் மற்றோரும் பெரியே-ாரும் சிறியோரும் பாடிப் பரவசமாகி இறையடி தேட வேண்டுமென இருகரம் கூப்பி வேண்டி நிற்கின்றேன்.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பத் தொடர் பறுத்துச் சோதியாய் அன்பமைத்து
சீரார் பெருந்துறையோன் நம்முடைய சிந்தையே
ஊராகக் கொள்வான் உவந்து



அன்புடன்

**வேலணையூர் பொன்னண்ணா**
(பில்லூாண்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (விநாயகர் வணக்கம்)

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தீராத வியாதிகள் தீர

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவித்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே

## தீர்க்காயுளும் ஆரோக்கியமும் வளர

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும்
ஆகிவந்து
வெவ்விய காலன் என் மேல்வரும் போது வெளிநிற்கவே

## கடன் தொல்லைகள் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்
சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒருகாலத்திலும்
சொல்லாமை வைத்ததே.

## பெருஞ்செல்வம் உண்டாக

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்(கு)அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்குள வாகிய சின்னங்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்கு நல்ல வரன் கிடைக்க

அதிசய மான வடி(வு) உடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசய மான(து)அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

## ஸ்த்புத்திர பாக்கியம் உண்டாக

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்
அங்கம் தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத்
தடக்கையும் செம்முகனுமுந் நான்கிரு
மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 1

### தேவாரம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே



### திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை ஆர் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடையா யென்னைக் கண்டு கொள்ளே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின்கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரு முறு கேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபடஅருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 2

### தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே.

### திருவாசகம்

ஈசனேயென் எம்மானே எந்தை பெருமான் என் பிறவி
நாசனேநான் யாதுமென் றல்லாப் பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேசனேஅம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே.

### திருவிசைப்பா

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதி
அடல்விடப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ணலே என்னை ஆட்கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணிநான் தொழ பயந்தருள்புரியெனப் பணிந்தார்

## திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற்ற லையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவு தரிசனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 3

### தேவாரம்

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே

### திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

### திருவிசைப்பா

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பால் செல்லுஞ் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே.

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்ட பத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்றொழ.

## திருப்புகழ்

பக்தியால் யானுனை பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்


திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 4

### தேவாரம்

மங்கையற்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயற்செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவ
பொங்கழலுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே



### திருவாசகம்

வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந்நாதனார் அன்னே என்னும்.

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவா வினன்குடிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 5

### தேவாரம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந் தார்தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந் தேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்கு
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே..!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே.!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்தவெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

## புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார், பரவினார், பணிந்தார்!

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியிலு றைபவர்
கற்பகமென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணி படு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 6

### தேவாரம்

கூற்றா யினவாறு விலக் ககலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

### திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை
துணையிலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு மலறிலை
செய்வதொன் றறியேனே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செய் யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகிறேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடிவே ஆகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டரசு அமர்ந்திருந்தார்.

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிரை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர - எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் - அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் - இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் - ஒருநாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு - கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக - எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென - முதுகூகை

கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல - பெருமாளே

<u>வாழ்த்து</u>

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 7

### தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

### திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

### திருவிசைப்பா

பாடலங் காரப் பரிசில்கா சருளி
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்து எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் னமுதைத்
திருவீழி மிழலையூர் ஆளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்கு எவ்விடத் தேனே.

### திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங்கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந்தில்லை பொதுநடம் போற்றிபோற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்று
ஈசனுடன் ஞான மொழிபேசு முகம் ஒன்று
கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்று
ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்
ஆதி யருணாசலம் அமர்ந்த பெருமாளே.



## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 8

### தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே

### திருவாசகம்



சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

### திருவிசைப்பா

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவம்
துவளுமே கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகுங் கழற வுழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## புராணம்

வருமுறைப் பிறவி வெள்ளம்
வரம்பு காணா தழுந்தி
உருவெனும் துயரக்கூட்டில்
உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து
முன் செல்லும் சிறப்பினாலே
மருவிய பிறவி நீங்க
மன்னுசோ தியினுட் புக்கார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 9

### தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

### திருவாசகம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

### திருவிசைப்பா

புவனநா யகனே! அகவுயிர்க்கு அமுதே
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ! பன்னகா பரணா!
அவனிஞா யிறுபோன்று அருள்புரிந்து அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றும் முற்றும் எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர் அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகழ் தாண்டு கொண்டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி



## திருப்புகழ்

தந்ததனத் தானதனத் .......... தனதான
உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் 10

### தேவாரம்

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி யெம் பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை
அட்டித் தரப்பணியே.

### திருவாசகம்

புற்றில்வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

### திருவிசைப்பா

சித்தனே! அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகரருள்வீற் றிருந்த
அத்தனே! அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே! அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே! அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவர் துயர்கெடுத்து எனக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக்கு என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

தாவறு உலகெலாந் தந்த நான்முகன்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத்............. தொடராலே
சஞ்சலந் துஞ்சித்........... திரியாதே
கந்தனென் றென்றுற்........ றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் ...... புணர்வோனே
சங்கரன் பங்கிற் ........... சிவைபாலா
செந்திலங் கண்டிக் ........ கதிர்வேலா
தென்பரங் குன்றிற் ......... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் - 11

### தேவாரம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே.

### திருவாசகம்



வேண்டும் வேண்டும் மெய்யடியாருள்ளே
விரும்பி எனை அருளால்
ஆண்டா யடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே.

### திருவிசைப்பா

பூத்திரள் உருவம் செங்கதிர் வீரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந்து ஓமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்கும் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதையென் ஆர்வத்தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

யாவர் எனினும் இகல் எறிந்தே ஈசனடியார் தமக்கின்பம்
மேவ அளிக்கும் முனையடுவார் விரைப் பூங்கமலக் கழல்வணங்கித்
தேவர் பெருமான் சைவநெறி விளங்கச் செங்கோல் முறைபுரியும்
காவல் பூண்ட கழற்சிங்கர் தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம்.

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனு மாகி அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர் மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி இனிமையு மாகி - வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ எனது முன்னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பஞ்சபுராணம் - 12

### தேவாரம்

வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பாவென நின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே.

### திருவாசகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி



### திருவிசைப்பா

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்
எம்பிரான் நடஞ்செய் சூழலங் கெல்லாம்
இருட்பிழம் பறவெறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரம் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே..

### திருப்பல்லாண்டு

சேலும் கயலும் திளைக்கும் கண்ணாரிளங்
கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறி தந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

செய்வ தொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்து என்
ஐயன் அணைந்தான் எனை யாளும் அண்ணல் அணைந்தான் ஆரூரில்
சைவன் அணைந்தான் என் துணையாம் தலைவன் அணைந்தான்
தரணியெலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான் என்று ஓகை முரசம் சாற்றுவித்தார்.

## திருப்புகழ்

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## வாழ்த்து


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org